அமித்ஷா பதவி விலக கோரி போராட்டம்

▶ கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் டெல்லியில் நடத்திய போராட்டத்தின் போது மாணவர்கள் மீது போலீசார் நடத்திய அடக்குமுறைகளை கண்டித்து ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா பதவி விலக வலியுறுத்தி இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் ஜந்தர் மந்தரை நோக்கி நேற்று பேரணி நடத்தினர்.

அசாதாரண சூழல்களை தவிர மற்ற நேரங்களில்

பெல்லட் குண்டுகளை பயன்படுத்தக் கூடாது

உச்ச நீதிமன்றம் அதிரடி

புதுடெல்லி, ஜூலை 31: நீட் வினாத்தாள் கசிவுக்கு எதிராக டெல்லியில் கரப்பான் பூச்சி இயக்கத்தின் சார்பாக போராடிய மாணவர்களை கட்டுப்படுத்தும் விதமாக போலீசார் ரப்பர் குண்டு துப்பாக்கியால் சுட்டும் கலைத்தனர். இந்த நிலையில் போராட்டங்களின் போது பெல்லட் குண்டுகளை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனு உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்யகாந்த் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தபோது பிறப்பித்த உத்தரவில்,"டெல்லி மாணவர்கள் போராட்டத்தில் காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்க வேண்டும். குறிப்பாக பெல்லட் குண்டுகளை முக்கியமான அசாதாரண சூழல்களை தவிர மற்ற நேரங்களில் கண்டிப்பாக பயன்படுத்தக் கூடாது. குறிப்பாக டெல்லி போராட்டத்தின் போது மாணவர்கள் மீது எந்தவிதமான ஆயுதம் பயன்படுத்தப்பட்டது என்பது குறித்து காவல்துறை விளக்கமளிக்க வேண்டும். பெல்லட் குண்டுகள் பயன்படுத்தப்பட்ட விவகாரத்தை உச்ச நீதிமன்றம் விரிவாக விசாரணை நடத்த தயாராக இருக்கிறது என்று திட்டவட்டமாக தெரிவித்த நீதிபதிகள், வழக்கின் விசாரணையை ஒத்திவைத்தனர்.

மக்களவையிலும் மசோதா நிறைவேற்றம்

வந்தே மாதரம் பாடலை இனி அவமதித்தால் 3 ஆண்டு சிறை

திமுக கடும் எதிர்ப்பு

புதுடெல்லி, ஜூலை 31: தேசிய பாடலான வந்தே மாதரத்தை அவமதிப்பதை தண்டனைக்குரிய குற்றமாக்கும் மசோதா மாநிலங்களவையை தொடர்ந்து மக்களவையில் நேற்று நிறைவேற்றப்பட்டது. கடும் அமளிக்கு இடையே நடந்த குறுகிய விவாதத்தில் மசோதாவுக்கு திமுக கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

கடந்த *1971*ல் கொண்டு வரப்பட்ட தேசிய கவுரவ அவமதிப்பு சட்டத்தின்படி, தேசியக் கொடி, தேசிய கீதம் மற்றும் அரசியலமைப்பு சட்டம் ஆகியவற்றை அவமதித்தால் *3* ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்படும். இதில் தேசிய பாடலான வந்தே மாதரத்தையும் சேர்க்கும் வகையில், தேசிய கவுரவ அவமதிப்பு தடுப்பு திருத்த மசோதா மாநிலங்களவையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து, இந்த திருத்த மசோதா மக்களவையில் கடும் அமளிக்கு மத்தியில் நேற்று தாக்கல் செய்யப்பட்டு குறுகிய விவாதம் நடந்தது.

விவாதத்தில் பேசிய திமுக எம்பி கனிமொழி, ''தேசியவாதம் என்ற போர்வையில் கொண்டு வரப்படும் இந்துத்துவா அஜெண்டா இது. கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது. சட்டத்தின் மூலம் தேசியவாதத்தை நீங்கள் திணிக்க முடியாது. இப்பாடல் நாட்டின் மதச்சார்பின்மைக்கு முரணாக உள்ளது. நாட்டின் அரசியலமைப்பை உருவாக்கிய முன்னோர்கள் இப்பாடலின் *2* சரணங்களை போதும் என்ற கருத்தை கொண்டிருந்தனர். ஆனால் இன்று, அனைத்து *6* சரணங்களையும் பாடுவதை கட்டாயமாக்கி, அவ்வாறு பாடாததை ஒரு குற்றமாகக் கருதுவதன் மூலம் நாட்டைப் பிளவுபடுத்த நீங்கள் முயற்சிக்கிறீர்கள்" என கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

இரு எம்பிக்கள் மட்டுமே விவாதத்தில் பேசிய நிலையில் அதற்கு பதிலளித்து பேசிய ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய், "காங்கிரஸ் தனது *76* ஆண்டுகால ஆட்சியில் வந்தே மாதரம் பாடலுக்கு உரிய மரியாதையை அளித்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு பதிலாக திருப்திபடுத்தும் அரசியலில் ஈடுபட்டது. மோடி அரசு தேசிய பாடலுக்கு அது பெற தகுதியான உரிய மரியாதையை அளித்து வருகிறது. ஒரே இந்தியா, சிறந்த இந்தியா என்ற நோக்கத்திற்கு வந்தே மாதரம் பாடலின் முழுமையான வடிவம் நமக்கு தேவை" என்றார்.

பின்னர், எதிர்க்கட்சிகளின் அனைத்து திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டு குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேற்றப்பட்டது. அப்போது திமுக எம்பி ஆ.ராசா எதிர்ப்பு தெரிவித்து ஆவணத்தை கிழித்து அவையின் மையப்பகுதியில் வீசினார். இதன் மூலம், தேசிய கவுர அவமதிப்பு தடுப்பு மசோதா இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டதன் மூலம் ஜனாதிபதி ஒப்புதலுடன் சட்டமாக்கப்படும். இனி தேசிய கீதத்தை போல தேசிய பாடலான வந்தே மாதரம் பாடுவதை திட்டமிட்டு தடுத்தாலோ, இடையூறு செய்தாலோ *3* ஆண்டு வரை சிறை தண்டனை விதிக்கப்படும். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, நேற்றைய அலுவல்கள் முடித்துக் கொள்ளப்பட்டு மக்களவை இன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஜனாதிபதியுடன் பிரதமர் மோடி திடீர் சந்திப்பு

புதுடெல்லி, ஜூலை 31: பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்புக்கான அமைச்சரவை குழு கூட்டம் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் தேசிய பாதுகாப்பு விவகாரம், மேற்காசிய நிலவரம், கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, திரவ எரிவாயு, உரங்களின் உள்நாட்டு இருப்பு மற்றும் குறுகிய கால அல்லது நீண்ட கால வினியோகங்கள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பிரதமர் மோடி ஜனாதிபதி முர்முவை சந்தித்து பேசினார். விரைவில் அமைச்சரவை மாற்றம் இருக்கலாம் என கருதப்படுகிறது.

ராகுல்காந்தி கருத்துக்கு கரப்பான்பூச்சி ஜனதா கட்சி ஆதரவு

மாணவர்கள் மீது தாக்குதலுக்கு உத்தரவிட்டவர் அமித்ஷா தான்

உள்துறை அமைச்சர் பதவியில் இருந்து விலகவும் அபிஜித் தீப்கே வலியுறுத்தல்

சத்ரபதி சம்பாஜி நகர், ஜூலை 31: டெல்லியில் நடந்த போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பெல்லட் குண்டு மூலம் துப்பாக்கிசூடு நடத்தப்பட்டதில் ஒரு மாணவனுக்கு கண் பார்வை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி பரபரப்பு குற்றம் சாட்டினார். மேலும் மாணவர்கள் மீது துப்பாக்கிசூடு நடத்த உள்துறை அமைச்சர் அமித் ஷா உத்தரவிட்டார். எனவே அவர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று ராகுல் காந்தி கோரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில், கரப்பான் பூச்சி ஜனதா கட்சி (சிஜேபி) நிறுவனர் அபிஜித் தீப்கே தனது சொந்த ஊரான மகாராஷ்டிரா மாநிலம், சத்ரபதி சம்பாஜி நகரில் நேற்று பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியது:

நாட்டில் ஜனநாயகம் ஆபத்தில் இருக்கிறது. கட்சிகளை உடைக்க புலனாய்வு அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது என்பது வெறும் எதிர்க்கட்சிப் பிரச்னை மட்டுமல்ல. அதைக் காப்பாற்ற நாட்டு மக்கள் ஒன்றிணைய வேண்டும்.

நீதித்துறையின் மீதே ஒரு கேள்விக்குறி எழுந்துள்ளது. சிவசேனா மற்றும் தேசியவாத காங்கிரஸ் போன்ற கட்சிகளை உடைக்க அமலாக்கத்துறையும் சிபிஐயும் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதை நாம் பார்த்திருக்கிறோம். நாட்டில் உள்ள பெரிய அமைப்புகளுக்கு, ஜனநாயகத்தை உயிர்ப்புடன் வைத்திருப்பதும், ஒரு தனி மனிதனின் சர்வாதிகாரத்தை உருவாக்காமல் தடுப்பதும் கடமையாக இருந்தது. ஆனால், அவர்கள் அதை நடக்க அனுமதித்து விட்டனர். இதைத் தடுக்க, எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, மக்களும் ஒன்றிணைய வேண்டும்.

ஜூலை *20*ம் தேதி மாணவர்கள் போராட்டத்தின் போது படைகளை பிரயோகிக்க உள்துறை அமைச்சர் அமித் ஷா தான் உத்தரவிட்டிருக்க வேண்டும். போலீசாரின் அடக்குமுறை தொடர்பாக அவர் பதவி விலக வேண்டும்.

நாட்டின் புதிய கல்வி அமைச்சர் பாலியல் குற்றவாளிகளைப் பாராட்டுகிறார் என்றால், தர்மேந்திர பிரதானை நீக்கிய பிறகு மற்றொரு விசித்திரமான மனிதர் கொண்டுவரப்பட்டுள்ளார் என்று அர்த்தம். அவர்களது கட்சி குண்டர்களால் நிரம்பியிருப்பதால் அவர்களால் வேறு எதுவும் செய்ய முடியாது. ராம் ரஹீம் (பாலியல் குற்றவாளி) போன்றவர்கள் அவர்களது பதவிக்காலத்தில் பரோலில் வெளிவருகிறார்கள். இந்த அரசாங்கம் குண்டர்களையும் பாலியல் குற்றவாளிகளையும் ஆதரிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

வினாத்தாள் கசிவு தடுப்பு திருத்த மசோதா

மாநிலங்களவையிலும் நிறைவேறியது

வாக்கெடுப்பில் பங்கேற்காமல் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

புதுடெல்லி, ஜூலை 31: வினாத்தாள் கசிவு தடுப்பு திருத்த மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, மாநிலங்களவையில் நேற்று நிறைவேறியது.

நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தை தொடர்ந்து பொதுத்தேர்வுகள் முறைகேடு தடுப்பு சட்டத்தை மேலும் கடுமையாக்கும் மசோத மக்களவையில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவை மாநிலங்களவையில் ஒன்றிய அமைச்சர் ஜிதேந்திர சிங் நேற்று தாக்கல் செய்தார்.

விவாதத்தில் பங்கேற்று பேசிய மாநிலங்களவை எதிர்க்கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, "முக்கியமான இந்த மசோதா மீதான விவாதத்தின் போது அவையில் பிரமதர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் இல்லாதது கண்டிக்கத்தக்கது. இவ்வளவு கொந்தளிப்பான சூழல் நிலவியும் அவர்கள் இருவரும் இதுவரை வாய் திறக்கவில்லை. யாராவது உங்கள் வாயை தைத்து விட்டார்களா? போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது காவல் துறையின் அத்துமீறலுக்கு அமித்ஷா தான் பொறுப்பு. நாட்டின் நலன் கருதி, அந்த அவமானத்தை அவர் தாங்கியிருக்க வேண்டும். மாணவர்கள் அரசுக்கு ஏற்கனவே ஒரு பாடத்தை கற்பித்துள்ளார்கள். அடுத்து, அதை விடப் பெரிய பாடத்தை மீண்டும் கற்பிப்பார்கள்" என ஒன்றிய அரசை எச்சரித்தார்.

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என திமுக எம்பி திருச்சி சிவா வலியுறுத்தினார். விவாதத்தில் பேசிய அவர், "மாணவர்களை குறைத்து மதிப்பிடாதீர்கள். பெல்லட் துப்பாக்கிகள், தடியடி, கண்ணீர் புகை குண்டுகளை பயன்படுத்தி அவர்களை கையாள முயற்சிக்காதீர்கள்" என்றார். வினாத்தாள் கசிவு பிரச்னை அதிகரிப்பதற்கு பயிற்சி மையங்களே காரணம் என குற்றம் சாட்டி அதிமுக எம்பி தம்பிதுரை, அவற்றை ஒழுங்குபடுத்த அல்லது ஒழிக்க தனி சட்டம் இயற்ற வேண்டுமென வலியுறுத்தினார். தொடந்து விவாதம் நடந்தது. அமித்ஷா அவைக்கு வராததால் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்த பிறகு நடந்த வாக்கெடுப்பில் மசோதா மாநிலங்களவையிலும் நிறைவேறியது.

4வது வீடியோ மூலம் மோடி வாழ்த்து

மாணவர்கள் போராட்டத்தை தொடர்ந்து, பிரதமர் மோடி இன்ஸ்டாகிராம் வீடியோ மூலம் நாட்டின் இளைஞர்களுடன் உரையாடி வருகிறார். இதுவரை 3 வீடியோக்கள் மூலம் முக்கிய அறிவிப்புகளை வெளியிட்ட பிரதமர் மோடி, இன்ஸ்டாவில் நேற்று 4வது வீடியோ மூலம் வினாத்தாள் கசிவு தடுப்பு திருத்த மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டதற்கு வாழ்த்து தெரிவித்தார்.

7000 மாணவர்களுக்கு எச்ஐவி தொற்று

கர்நாடகாவில் அதிர்ச்சி தகவல்

பெங்களூர், ஜூலை 31: கர்நாடகாவில் *7* ஆயிரத்துக்கும் அதிகமான பேருக்கு எச்ஐவி தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் *7* ஆயிரத்துக்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்களுக்கு எச்.ஐ.வி தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது, மேலும் கல்லூரிகளில் கட்டாய பரிசோதனை நடத்தப்பட உள்ளது என்ற செய்திகள் பரவின. இதனை தொடர்ந்து, கர்நாடக மாநில எய்ட்ஸ் தடுப்பு சங்கம் மற்றும் அதன் திட்ட இயக்குநர் பத்மா பசவந்தப்பா ஆகியோர் ஒரு அதிகாரப்பூர்வ விளக்க வீடியோவையும் அறிவிப்பையும் வெளியிட்டனர். அதில், *7* ஆயிரம் கல்லூரி மாணவர்களுக்கு எச்.ஐ.வி உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், கல்லூரிகளில் கட்டாய பரிசோதனை நடத்தப்பட உள்ளதாகவும் பரவிய செய்திகள் பாதி மட்டுமே உண்மையானது. இதெல்லாம் ஒரே நேரத்தில் பரவிய வைரஸ் அல்ல. மொத்தமாக திட்டமிட்டு எடுக்கப்பட்ட சோதனையில் கண்டறியப்பட்ட முடிவுகள். அதாவது. ஒரே நாளில் இத்தனை பேருக்கு எய்ட்ஸ் வரவில்லை. மாறாக வேறு வேறு மாதங்களில், வேறு வேறு இடங்களில் பரவிய எய்ட்ஸ் பாதிப்புகள் என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. கல்லூரிகளில் எச்ஐவி பரிசோதனை ஒருபோதும் கட்டாயமாக்கப்படவில்லை. அது முற்றிலும் சுய விருப்பத்தின் பேரிலேயே நடத்தப்படுகிறது' என்றும் விளக்கம் அளித்துள்ளனர். இந்த தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. கர்நாடகாவில் ஒட்டுமொத்தமாக *54* ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்களுக்கு எச்ஐவி தொற்று இருப்பதை அறியாமலேயே வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

போலி பாஸ்போர்ட் வழக்கு

சோட்டா ராஜனுக்கு 7 ஆண்டு சிறை

புதுடெல்லி, ஜூலை 31: போலி ஆவணங்களின் அடிப்படையில் பாஸ்போர்ட் பெற்ற வழக்கில் சோட்டா ராஜனுக்கு சென்னை சிபிஐ நீதிமன்றம் *7* ஆண்டு சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளது.

நிழல் உலக தாதா சோட்டா ராஜன் போலி ஆவணங்களை சமர்ப்பித்து பாஸ்போர்ட்டுக்க விண்ணப்பித்துப் பெற்றதன் மூலமாக சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தை ஏமாற்றியதாக கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. கடந்த *2002*ம் ஆண்டு மார்ச் *19*ம் தேதி சிபிஐ அதிகாரிகள் இது குறித்த விசாரணையை தொடங்கினார்கள். விஜயகதம் என்ற பெயரில் பாஸ்போர்ட்டுக்கு போலி ஆவணங்களை சமர்ப்பித்தது விசாரணையில் தெரியவந்தது. சோட்டா ராஜனுக்கு எதிராக *22* ஆண்டு சட்டப்போராட்டத்திற்கு பிறகு இந்த வழக்கில் சோட்டா ராஜனுக்கு *7* ஆண்டு சிறை தண்டனை விதித்து சென்னை சிபிஐ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தண்டனை பெற்ற சோட்டா ராஜன் ஆயுள் தண்டனை பெற்று டெல்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசு
சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்
மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுத் துறை (DEPwD)

பொது அறிவிப்பு

மாற்றுத் திறனாளிகளின் அதிகாரமளிப்பிற்கான தேசிய விருதுகள் - 2026
விண்ணப்பங்கள் / பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி நீட்டிப்பு

மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுத் துறை (DEPwD), மே 15, 2026 அன்று வெளியிட்ட ஒரு பொது அறிவிப்பின் மூலம், மாற்றுத் திறனாளிகளின் அதிகாரமளிப்பிற்கான தேசிய விருதுகள், 2026-க்கான விண்ணப்பங்கள்/ பரிந்துரைகளை அழைத்தது. விண்ணப்பங்கள்/பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி ஜிலை 31, 2026 ஆகும்.

2. அனைத்துத் தரப்பினர் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி, ராஷ்ட்ரிய புரஸ்கார் இணையதளம் வழியாக இணையவழி விண்ணப்பங்கள்/ பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி ஆகஸ்ட் 15, 2026 ஆம் ஆண்டு ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதைத் இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

3. விண்ணப்பதாரர்கள்/பரிந்துரையாளர்கள், விண்ணப்பங்கள்/ பரிந்துரைகள் https://awards.gov.in என்ற ராஷ்ட்ரிய புரஸ்கார் இணையதளத்தில் ஆன்லைன் முறையில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். அச்சுப் பிரதி, தபால், கூரியர் அல்லது மின்னஞ்சல் உட்பட வேறு எந்த முறையிலும் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. விருதுகள் தொடர்பான விரிவான வழிகாட்டுதல்கள், தகுதி வரையறைகள் மற்றும் பிற தகவல்கள் பின்வரும் இணையதளங்களில் கிடைக்கின்றன:

மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுத் துறை: https://depwd.gov.in
ராஷ்ட்ரிய புரஸ்கார் இணைய முகப்பு: https://awards.gov.in

cbc 38117/11/0006/2627

தெற்கு இரயில்வே

ஸ்டோர்ஸ் சப்ளைக்கான
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.E-16/2026

கீழ்க்காணும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் / திருத்தம் , மிஸிணிறிஷி இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. நிறுவனங்கள், **<http://www.ireps.gov.in > login > e.tender > goods & services (new)** என்பதைப் பார்வையிட்டு இந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கு விலைப்புள்ளிகளை அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கு காகித வடிவ விலைப்புள்ளிகள் அனுமதிக்கப்பட மாட்டாது. **அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் மூடப்படும் நேரம் 14.30 மணி.**

வ. எண்.	ஒப்பந்தப் புள்ளி எண்.	விவரம்	கெடுத் தேதி	அளவீடு
1.	44260007	கட் ஆப் ஆங்கிள் காக்	10/08/2026	15322 நெ
2.	01264379	ஒரு கோச்சு செட் ஆக PU பெயின்ட் கிட்	11/08/2026	528 செட்கள்
3.	01264312B	பெயின்ட் – ரெட் ஆக்சைடு ஜிங்க் குரோம்	11/08/2026	93380 லிட்டர்கள்
4.	04263514B	CBC AAR 'H' டைப்–க்காக பேலன்சுடு ட்ராப்ட் கியர்	13/08/2026	163 நெ
5.	26265014	டேப்ளட் பிசி டைப் FOG சப்ளை செய்து நிலைநாட்டி நிறுவுதல்	17/08/2026	962 நெ
6.	16265013	செங்குத்து வகை ஹெவி பீம் வெல்டிங் இயந்திரம் மற்றும் ஹைட்ராலிக் ஸ்ட்ரெயிட்டனர் இயந்திரம்	17/08/2026	1 நெ
7.	04260187	சைடு பஃபர் கேசிங்	17/08/2026	1259 நெ
8.	44260369A	டிஸ்ட்ரிபியூட்டர் வால்வு முழுமையானதாக	17/08/2026	319 நெ
9.	90265223A	இஓடி கிரேன்	17/08/2026	1 நெ
10.	04261067	எண்ட்வால் ஸ்லைடிங் டோர் முழுமையானதாக	19/08/2026	346 நெ
11.	04260962	செகண்டரி லேட்டரல் டேம்பர்	20/08/2026	1450 நெ
12.	11260455	வால்வு ரெகுலேட் செய்யப்பட்ட லீட் ஆசிட் பேட்டரிகள் 1100 AH	21/08/2026	58 செட்கள்
13.	78266115	எல்எச்பி–க்கான அட்ஹசிவ்	21/08/2026	17400 நெ
14.	26261162	சாதாரண அளவு வார்ப்பு இரும்பு பிரேக் ஷூ (பிரேக் பிளாக்)	24/08/2026	35834 நெ
15.	04260108	சைடு பேரர் –க்கான வேரிங் பீஸ்	24/08/2026	2646 நெ
16.	11260635	எல்எச்பி வகை ஏசி கோச்சுகளுக்காக ரிடர்ன் ஏர் ஃபில்ட்டர்	24/08/2026	2617 நெ
17.	44260446	போகி சென்ட்டர் பிவட் பாட்டம்	24/08/2026	1672 நெ
18.	90266123	GPS என்பதன் அடிப்படையிலான பொது அறிவித்தல் மற்றும் பயணியர் தகவல் அளிக்கும் சிஸ்டத்திற்காக செட் ஆக அயிட்டம்கள்	24/08/2026	14 செட்கள்
19.	90266390A	KNUCKLE	24/08/2026	1050 நெ
20.	90265367	'ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் த்ரூ பிளோ RMPUக்காக' சப்ளை மற்றும் ரெட்ரோ பொருத்துதல்	24/08/2026	360 நெ
21.	78266176	பிரைமரி ஸ்பிரிங் இன்னர் மற்றும் அவுட்டர்	25/08/2026	2 அயிட்டம்கள்
22.	78265793	உயர் திறன் கொண்ட இன்ட்டர் வெஹிகுலர் கப்ளர்	27/08/2026	86 செட்கள்
23.	06265030	மல்ட்டி கிரேடு எஞ்சின் ஆயில் 15W40	28/08/2026	49980 லிட்டர்கள்
24.	78265644	ரூப் உடன் கூடிய ஏசி பேக்கேஜ்	28/08/2026	7 செட்கள்
25.	44260038	என்ஹேன்சுடு கேபாசிட்டி சைடு பஃபர் ப்ளஞ்சர்	31/08/2026	2320 நெ
26.	78265185A	வால்வு ரெகுலேட் செய்யப்பட்ட லீட் ஆசிட் பேட்டரிகள் 1100 AH	02/09/2026	31 செட்கள்
27.	04261053	ஏர் ரிசார்வையர் 125 லிட்டர் திறன்	07/09/2026	94 நெ
28.	78265184B	VRLA வகை 120 AH திறன் பேட்டரிகள்	07/09/2026	33 செட்கள்
29.	44260523	BTPNக்காக வால்வு சீட் மற்றும் வால்வு	21/09/2026	791 செட்கள்

கீழ்க்காணும் மின்னணு ஒப்பப்புள்ளி, ஜெம் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. நிறுவனங்கள், **www.gem.gov.in** இணையதளத்தைப் பார்வையிட்டு பின்வரும் மின்னணு ஒப்பப்புள்ளிக்காக விலைப்புள்ளிகளை குறிப்பிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். காகித வடிவ விலைப்புள்ளிகள் கவனிக்கப்பட மாட்டாது .

வ. எண்.	ஒப்பந்தப் புள்ளி எண்.	விவரம்	கெடுத் தேதி	அளவீடு
30.	GEM/2026/ B/7834074	கைத்தறி பருத்தி தலையணை உறை	17/08/2026	141948 நெ
31.	GEM/2026/ B/7694371	அனஸ்திசியா ஒர்க்ஸ்டேசன்	21/08/2026	1 நெ

முதன்மை தலைமை பொருட்கள் மேலாளர்

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: கிங்ஸ்டோன்பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி-620 017 தமிழ்நாடு.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.
கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்-ஏலம் மூலமாக 31.08.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும்.
விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
4	கடன் எண் HL00028100000005057068 மைக்கேல் ராஜ் வின்சென்ட், (கடன்தாரர்), மகேஷ் பிரியா மைக்கேல் ராஜ் (உப கடன்தாரர்	அறிவிப்பு தேதி: 11–05–2026 11–05–2026 தேதியன்று மொத்த நிலுவைத் ரூ 28,65,822/– (ரூபாய் இருபத்து எட்டு லட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று இருபத்து இரண்டு மட்டும்) அத்துடன் ஆண்டொன்றுக்கு 13.5% கூடுதல் வட்டியும்.	கையக	காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், ஒரத்தூர் கிராமம், காந்தி நகர், மனை எண் 59–B, பழைய S.No. 108/6A, பட்டாவின்படி புதிய S.No. 108/38 இல் உள்ள 4470 சதுர அடி பரப்பளவு கொண்ட அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள காலி நிலம் உள்ள சொத்து. எல்லைகள்: வடக்கில்: காலி நிலம்; தெற்கில்: 20 அடி சாலை; கிழக்கில் சாலை; மேற்கில்: மனை எண்.59A. இதன் அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 55 அடி; கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 94 அடி; வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 73 அடி; வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 60 அடி. கூடுவாஞ்சேரி சார்–பதிவு மாவட்டம், தாம்பரம் பதிவு மாவட்டத்தில் இந்த சொத்து அமைந்துள்ளது.	Rs. 3617907.00/- (ரூபாய் முப்பது ஆறு லட்சத்து பதினேழு ஆயிரத்து தொள்ளாயிரத்து ஏழு மட்டும்)	Rs. 361790.70/- (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தி ஒன்று ஆயிரத்து ஏழு நூற்றுத் தொண்ணூறு மற்றும் எழுபது பைசா மட்டும்)	28-08-2026 Before 5 PM	10,000/-	10-08-2026 (11AM – 4PM)	31-08-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.
ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்ச்சில் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 28.08.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை அவற்றின் மூல பிரதியை முகவரி: கிங்ஸ்டோன்பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, புதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி–620 017(த.நா), மேலும் கைபேசி எண். +91 9597907666, மின்னஞ்சல் முகவரி baskaran.soudararajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாட்கள் (முப்பது) அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்தித்தாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 31.07.2026, இடம்: தமிழ்நாடு
ஓம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்